விடை—

(அ) தற்போது திட்டம் ஏதுமில்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

100—

மறைமலைநகரில் நூலகம் ஏற்படுத்துதல்

வினா எண் 7227—திரு. பெ. சு. திருவேங்கடம்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

மறைமலைநகரில் ஒரு நூலகம் ஏற்படுத்தும் செயற் குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளதா?

விடை—

தற்போது இல்லை.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

10-05 மணி

2. தகவல் கோரல்

கோவை மற்றும் பெரியார் மாவட்டங்களில் சில இராமங்களில் தங்கம் இருப்பதாகச் சொல்லப்படுவதால் ஏற்பட்டுள்ள விளைவுகள் குறித்து

திரு. வி. கே. சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை, பெரியார் மாவட்டத்தில் உள்ளடங்கிய ஆலப்பாளையம் கள்ளிப்பாளையம், கனுவுக்கரை கவுண்டன் பாளையம், வாணிச்சிபாளையம், தேவன்பாளையம் போன்ற பல கிராமங்களில் தங்கம் இருப்பதாக சொல்லி அங்கே அதிகாரி கள் ஆய்வு நடத்திக்கொண்டிருக்கிறார்கள். அதன் காரணமாக அந்தப் பகுதியில் விவசாயிகள் கிணறு வெட்டக்கூடாது என்றும், அங்கே நிலங்களை விற்கவோ வாங்கவோ கூடாது என்றும் அறிவித்திருக்கிறார்கள். அதனால் அப்பகுதி விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆகவே, அந்தப் பகுதி யில் இவ்வாறு தங்கம் எவ்வளவு ஏக்கர் நிலப்பரப்பில் இருப்ப தாக ஆய்வு நடத்தியிருக்கிறார்கள்? அப்படி ஆய்வு நடத்தியதில்

1990 மார்ச் 24] [திரு. வி. கே. சின்னசாமி]

எவ்வளவு தங்கம் கிடைக்கும் என்ற முடிவுக்கு வந்திருக்கிறார்கள் என்பதையும் அறிய விரும்புகிறேன். அதோடு அங்கே அதற்காக ஆய்வு நடத்தியதில் இதுவரை எவ்வளவு கோடி செலவாகி யுள்ளது? அந்த திட்டம் துவங்குகின்றபோது அந்தப் பகுதி யிலுள்ள நில உரிமையாளர்களுக்கும், அங்கே வீடு கட்டி குடி யிருப்பவர்களுக்கும் நஷ்டஈடு தரப்படுமா? இல்லையென்றால் அப்படி எடுக்கின்ற தங்கத்திலே அவர்களுககு பங்கு கொடுக்க இந்த அரசு முன்வருமா என்பதையும் நான் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்வதோடு....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ரொம்ப ஆழமாகப் போகிறீர்களே, தங்கம் வெட்டுவதாலா? (சிரிப்பு).

திரு. வி. கே. சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கே தங்கம் உள்ளதா என்பதையும் இந்த ஆய்வின் மூலம் அங்கேயிருந்து தங்கம் கிடைத்துள்ளதா என்பதையும் மாண்புமிகு தலைவர் அவர்கள் மூலமாக மாண்புமிகு முதல்வர் அவர்களிடமிருந்து அறிய விரும்புகிறேன்.

*மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றைய தினம் மாண்புமிகு உறுப்பினர் நண்பர் சின்னசாமி அவர்கள் இது குறித்து ஒரு விளக்கம் கோர வேண்டுமென்று தங்கள் அறையில் கேட்டபோது, நானும் அதை ஏற்றுககொண்டு, உடனடியாக பெரியார் மாவட்ட ஆட்சித் தலைவர், கோவை மாவட்ட ஆட்சித் தலைவர் இவர்களோடு தொலைபேசியில் தொடர்பு கொள்ளப்பட்டது. தங்கம் கிடைக் கிறது என்றால் யாருக்குதான் ஆசை வராது (சிரிப்பு). எனவே, மிகுந்த துடிதுடிப்போடு இரண்டு மாவட்ட ஆட்சித் தலைவர்களுடனும் தொடர்பு கொண்டேன். ஆனால் நேற்று திரு. சின்னசாமி இன்னொரு கருத்தையும் சொன்னார். இப்படி தங்கம் அங்கே வெட்டி எடுக்கப்படப்போகிறது என்பதால் கிணறுகளே அங்கே தோண்டக்கூடாது என்று தடை விதித்திருப்ப தாகவும் சொன்னதால் அதுபற்றியும் நான் மாவட்ட ஆட்சித் தலைவர்களிடத்திலே கேட்டேன். எனக்குக் கிடைத்துள்ள விவரம், கிணறு தோண்டக்கூடாது என்று எவ்விதமான தடையும் யாருக்கும் அங்கே விதிக்கப்படவில்லை என்ப தாகும். ஆனால் ஜியாலாஜிக்கல் சர்வே, அதாவது நிலத்தடி ஆய்வு அந்தத் துறையின் சார்பில் சில மாதங்களுக்கு முன்பு அந்தப் பகுதியிலே ஒரு சோதனை நடைபெற்றது உண்மை என் றும் ஆனால் திரு. சின்னசாமி அவர்கள் எதிர்பார்ப்பதுபோல அங்கே தங்கம் கிடைப்பதில்லை என்றும் தகவல் வந்துள்ளது. ஆனால், அந்த ஆய்வின் மூலம் செம்பு தாதுப்பொருள் 'காப்பர் ஓர்' கிடைக்கலாம் என்று இப்போது தெரிய வந்துள்ளது என்றும் 'காப்பர் ஓர்' அங்கே கிடைக்கிறது என்ற காரணத்தைக் காட்டி

இப்போது அங்கே கிணறுகள் தோண்டுவதற்கு எதற்கும் தடை விதிக்கப்படவில்லை என்ற செய்தியையும் நான் இங்கே தெரிவித்துக்கொள்கிறேன்.

3. கவன ஈர்ப்பு

(அ) மதுரவாயல் கிராமத்தில் புறம்போக்கு நிலத்தில் குடியிருக்கும் ஆதிதிராவிடர் குடும்பங்களை வெளியேற்றும் நடவடிக்கையால் ஏற்பட்டுள்ள பாதிப்பு

திரு. உ. ரா. வரதராசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''செங்கை அண்ணா மாவட்ட ஆட்சியரின் ஆணைக்கிணங்க மதுரவாயல் பேரூராட்சிக்குட்பட்ட புறம்போக்கு நிலத்தில் குடியமர்த்தப்பட்ட 23 ஆதி திராவிடர் குடும்பங்களை 22—3—1990-க்குள் வெளியேற்ற அறிவிப்பு கொடுக்கப்பட்டுள்ளது குறித்து அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சரின் கவனத்திற்குக்கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு நாஞ்சில் இ. மனோகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. வரதராசன் அவர்கள் கவன ஈர்ப்பு தீர்மானம் என்கிற பெயரில் எனது கவனத்தையும் ஈர்த்துவிட்ட நிலையில் நான் கவனக்குறைவாக இருக்கக்கூடாது என்பதற்காக சில விளக்கங்களை இங்கே தெரிவிக்க விரும்புகிறேன்.

''செங்கை அண்ணா மாவட்டம், சைதாப்பேட்டை வட்டம் மதுரவாயல் கிராமம் புல எண் 335/1, தாங்கல்கரை புறம்போக்கு என வகைபாடு செய்யப்பட்டுள்ள நிலமாகும். இந்நிலம் நீர் நிலைப் புறம்போக்கு ஆதலால் அவை வகைபாடு மாற்றம் செய்ய தடையாணை உள்ளது. இந்நிலத்தில் குடிசையாகவும் விவசாயம் செய்தும் 23 ஆக்கிரமணங்களும் உள்ளன.... (மணியடிக்கப்பெற்றது).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : : மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு ஒரு சிறிய வேண்டுகோள். அறிக்கை இப்போது படைக்கப்பட்டதால், தொடர்ந்து அவரை வினாக்கேட்க அனுமதிக்கலாம். அந்த விளக்கத்தை அவர் படித்திருப்பார். அதற்கு மேலும் விளக்கம் அளித்தால் எனக்கு மகிழ்ச்சியே.

மாண்புமிகு திரு. நாஞ்சில் இ. மனோகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.